**செய்தி வெளியீடு எண்: 775** **நாள்: 08.11.2019**

**செய்தி வெளியீடு**

பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாட்டினை உருவாக்க அரசாணை எண் 84 சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை நாள் 25.06.2018 மூலம் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களான பிளாஸ்டிக் விரிப்புகள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் பூசப்பட்ட தேனீர் கப்புகள்/ டம்ளர்கள், பிளாஸ்டிக் உறிஞ்சு குழல்கள், பிளாஸ்டிக் கொடிகள், பிளாஸ்டிக் குடிநீர் பாக்கெட்டுகள், பிளாஸ்டிக் கைப்பைகள் (குடிமன் வரைமுறை இல்லாமல்) போன்றவற்றை தயாரிப்பதையும், சேமிப்பதையும், விநியோகிப்பதையும், போக்குவரத்து செய்வதையும், விற்பனை செய்வதையும் 01.01.2019 முதல் தமிழக அரசு தடை செய்து ஆணை பிறப்பித்தது.

இந்த ஆணையினை சீரிய முறையில் நடைமுறைப்படுத்த தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. உணவு விடுதிகள், திருமண மண்டபங்கள், ஜவுளி கடைகள் பேரங்காடிகள், பல்பொருள் அங்காடிகள், வணிகர்கள் சில்லறை வணிகர்கள் போன்றவற்றின் பிரதிநிதிகளுக்கு பல்வேறு கூட்டங்கள் நடத்தியும் விழிப்புணர்வு பிரச்சாரங்களை வழங்கியும் தடை அறிவிப்பை திறம் பட செயல்படுத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக வாரியம், தமிழ் நாட்டில் உள்ள நட்சத்திர விடுதிகளில் உள்ள தலைமை பொறியாளர்களுடன் கலந்துரையாடல் கூட்டத்தை 6.11.2019 அன்று நடத்தியது.

தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைவர் அவர்கள் இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். வாரியத்தின் உறுப்பினர் செயலர் அவர்கள் இக் கூட்டத்திற்கு வருகை புரிந்த பல்வேறு நட்சத்திர விடுதிகளின் பொறியாளர்களையும் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரிய உயர் அதிகாரிகளையும் வரவேற்று உரையாற்றினார்.

இக்கலந்துரையாடல் கூட்டத்தில் தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருள்களின் தடையினை செயல்படுத்த அவர்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் நிறுவனத்தில் சிறப்பாக செயல்படுத்திவரும் திடக்கழிவு மேலாண்மை குறித்த விளக்கங்கள் அளிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடல் கூட்டத்தில் நட்சத்திர விடுதிகளின் தலைமை பொறியாளர்கள் குழுமத்தின் துணை தலைவர் மற்றும் லீலா பேலஸ், ஐடிசி ஹோட்டல், தாஜ் கோரமண்டல் மற்றும் ஜி.ஆர்.டி ஹோட்டல்களின் பிரதிநிதிகள் தங்கள் நிறுவனங்களில் தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களை தவிர்த்து மாற்றுப் பொருட்கள் உபயோகிக்க எடுக்கப்பட்ட தற்போதய நடவடிக்கைகள் குறித்தும், திடக்கழிவு மேலாண்மையில் தாங்கள் எடுத்த சிறந்த நடவடிக்கைகள் குறித்தும், சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை பயனுள்ள முறையில் பயன்படுத்துதல் குறித்தும் காட்சி விளக்கவுரைகளை அளித்தனர்.

திடக்கழிவு மேலாண்மை மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை திறம்பட நிர்வகிப்பது குறித்த தகவல்கள் விவாதித்ததின் மூலம் இக்கூட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் பயனுள்ளதாக அமைந்தது.

தலைவர், தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அவர்கள் கீழ்கண்ட அறிவுரைகளை செயல்படுத்துமாறு கூறினார்.

- நட்சத்திர விடுதிகளில் பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்து அவர்கள் எடுத்த சிறந்த நடவடிக்கைகளை குறும்படங்களாக தயாரித்தல்.
- பள்ளி குழந்தைகள் மற்றும் சமுதாயத்தில் உள்ள நலிவுற்றவர்களையும் இணைத்து தடை செய்யப்பட்ட தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருள்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல் மற்றும்
- மழை நீர் சேமிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி செயல் படுத்துதல்

வாரியத்தலைவர் அவர்கள், தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் அதற்குரிய உகந்த மாற்றுப் பொருட்கள் குறித்த விளக்கப்படங்கள் அடங்கிய கையேடு, சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள் மற்றும் விழிப்புணர்வு குறுந்தகடுகளை கூட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் வழங்கினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**